மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2022ம் வருடம் ஏப்ரல் மாதம் 11ம் நாள்

ஸ்ரீபிலவ ஆண்டு பங்குனி மாதம் 28ம் நாள் திங்கட்கிழமை

**EA.No. 11/2022**

**in**

**EA.No. 55/2021**

**in**

**E.P.No. 27/2008**

**in**

**OS.No. 54/2003**

S.V. காந்தி ..... மனுதாரர்/ மனுதாரர்/3ம் தரப்பினர்

//எதிர்//

A. காமாட்சி @ காமாட்சி பிள்ளை
A. தமிழ்ச்செல்வன் @ போஸ்

..... எதிர்மனுதாரர்கள்/1,2 மனுதாரர்கள்/1,2 வாதிகள்

இந்த நிர் மனுவும் கடந்த 18.03.2022ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/மனுதாரர்/3ம் தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.S. ராதாகிருஷ்ணன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/1,2 மனுதாரர்கள்/1,2 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.K.ரவி** அவர்கள் ஆஜராகியும், கடந்த 04.04.2022ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் கோரிக்கை மனு எண் EA.No.55/2021ல் கடந்த 02.03.2021ல் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் பேரில் மேல்முறையீடு அல்லது சீராய்வு தாக்கல் செய்ய இருப்பதால், அதற்கான நகல் பெற்று மேற்படி மேல்முறையீடு அல்லது சீராய்வு தாக்கல் செய்யும் வரை நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையினை ஒரு மாத காலக்கட்டத்திற்கு இடை நிறுத்தம் செய்து நிறுத்தி வைக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இடைக்கால மனு எண். EA.No.55/2021ல் மனுதாரர் என்றும், மேற்படி இடைக்கால மனு எண் EA.No. 55/2021 மனுவும் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையில் தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி கோரிக்கை பாத்தியம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி நிறைவேற்றுதல் மனு EP No. 27/2008 மற்றும் அசல் வழக்கு எண் OS.No. 54/2003 வழக்கில் இந்த நிர் மனுதாரர் மூன்றாம் தரப்பினர் என்றும், மேற்படி அசல் வழக்கு OS.No 54/2003 வழக்கும் சுவாதீன ஒப்படைப்பு மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சுப்பிரமணிய ஐயர் மற்றும் சேதுராமன் ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டதில், கடந்த 29.10.2003ம் தேதியில் அசல் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையின் அடிப்படையில் இந்த நிர் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதுவும் இந்த நிர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் CRP(MD) No. 1451/2013ன்படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கீழமை நீதிமன்ற உத்தரவு ரத்து செய்து சுவாதீன ஒப்படைப்பு வழங்க உத்திரவிட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் பேரில் நிறைவேற்றுதல் மனுதாரர் தரப்பில் சுவாதீன ஒப்படைப்பு பெறுவதற்கு அமீன் மூலம் நடவடிக்கை எடுத்து அதன் தொடர்ச்சியாக 22.10.2021ம் தேதியில் இந்த நிர் மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்துள்ளார்கள் என்றும், உண்மையில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தும் நீரேத்தான் கிராம ரீசர்வே எண். 10/6C2-ல் 1-1/2செண்ட் இடமும் அதேபோல் ரீசர்வே 13/114ல் 14 செண்ட் இடமும் ஆக மொத்தம் 15-1/2 செண்ட் இடம் இந்த நிர் மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும், அதுவும் பழைய சர்வே எண். 13/7Bமற்றும் 10/6Cல் கட்டுப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கு மற்றும் நிறைவேற்றுதல் மனுவில் இந்த நிர் மனுதாரரோ அல்லது மனுதாரரின் முன் கிரையதாரர் ராமச்சந்திரன் என்பவரோ தரப்பினர்களாக இல்லை என்பதால், மேற்படி தீர்ப்பாணை மற்றும் உத்திரவுகள் இந்த நிர் மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றும், அதனடிப்படையிலே இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் இந்த நிர் மனுதாரர் தரப்பில் தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி கோரிக்கை பாத்திய மனு எண். EA No. 55/2021ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதுவும் Premature என்ற அடிப்படையில் கடந்த 02.03.2022ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி உத்திரவின் பேரில் மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு தாக்கல் செய்யும்பொருட்டு 04.03.2022ம் தேதியில் நகல் கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி நகல் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பதால், இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவினை நிறைவேற்றும் பட்சத்தில் மனுதாரருக்கும், மனுதாரர் சொத்தில் வாடகைதாரராக இருப்பவர்களுக்கும் பேரிழப்பு ஏற்படும் என்றும், எனவே நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையினை இடைக்கால மனு எண். EA.No.55/2021

உத்திரவின் பேரில் மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு தாக்கல் செய்து உத்திரவு பெறும் வரை 1 மாதக்காலக்கட்டத்திற்கு இடைநிறுத்தம் (Stay) செய்து உத்திரவிட வேண்டியது அவசியமானது என்றும், அவ்வாறு இல்லாவிடில் மனுதாரருக்கு தாங்க இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், இதனால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் வாதுரைக்கப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சட்டப்படியோ பொருண்மைபடியோ நிலை நிற்கத்தக்கதல்ல என்றும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 26 மற்றும் கட்டளை 21 விதி 29ன்படி இந்த நிர் மனுப்பரிகாரம் மனுதாரர்களுக்கு சட்டப்படியோ பொருண்மைபடியோ கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த நிர் மனுதாரர் அசல் வழக்கு மற்றும் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையில் மூன்றாம் தரப்பினராக இருக்கின்ற நிலையில் இடைநிறுத்தம் கோரி மனு தாக்கல் செய்வதற்கு எவ்வித உரிமையும் சட்டப்படி மனுதாரருக்கு கிடையாது என்றும், உண்மையில், மேற்படி கோரிக்கை மனு EA.No. 55/2021ல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் பேரில் ஏற்கனவே இந்த நிர் மனுதாரர் தரப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் CRP (MD) 626/2022ன்படியும் அதில் இடை நிறுத்தம் மனு CMP (MD) NO. 2589/2022ன்படியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடைநிறுத்தல் மனுவில் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் எவ்வித இடைக்கால தடையுத்திரவு வழங்கப்படவில்லை என்றும், இந்நிலையில், மேற்படி சீராய்வு மனுவும் முழுமையாக இருதரப்பு விசாரணையும் கேட்கப்பட்டு, இறுதி உத்திரவிற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், இம்மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரம் தொடர்பான நடவடிக்கை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு விட்டதால், இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல எனவும் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த நிர் மனுப்பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா என்பதே தீர்வு காண வேண்டிய பொருண்மையாகும்.

தீர்வு

இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்பொழுது, இம்மனு விசாரணையின் பொழுது எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 04.04.2022ம் தேதியில் மேற்படி கோரிக்கை மனு EANo. 55/2021ல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் பேரில் இந்த நிர் மனுதாரரால் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் சீராய்வு மனு தாக்கல் CRP(MD) 626/2022 ன்படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு இறுதி உத்திரவுக்காக ஒத்தி வைக்கப்பட்டதாகவும், எனவே இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல எனவும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பாணையின் நகலும் இந்த நிர் மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்

தொடர்பாக இந்த நிர் மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. எனவே கோரிக்கை மனு எண். EANo.55/2021ன்படி பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் பேரில் இந்த நிர் மனுதாரர் தரப்பில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு இறுதி உத்திரவுக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்ற பொருண்மையானது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பொருண்மையாக இருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) மேலும் இந்த நிர் மனுதாரர் தரப்பில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையால் இந்த நிர் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையினை நிறுத்தி வைக்கக் கோரி எவ்வித இடைக்கால தடையுத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. அவ்வாறு பிறப்பிக்கப்பட்டதாக இந்த நிர் மனுதாரர் தரப்பில் எவ்வித வாதுரையும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் மேல்முறையீடோ அல்லது சீராய்வோ தாக்கல் செய்வதின் அடிப்படையில் அசல் மனு மற்றும் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையினை நிறுத்தி வைக்க இயலாது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும்.

6) மேலும் இந்த நிர் மனுதாரரும் அசல் வழக்கு மற்றும் நிறைவேற்றுதல் மனு நடவடிககையில் மூன்றாம் தரப்பினர் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. மேலும் இந்த நிர் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையினை மூன்று மாதக்காலக்கட்டத்திற்குள் விரைந்து முடிந்து சுவாதீன ஒப்படைப்பு மனுதாரரருக்கு வழங்கப்பட வேண்டுமென ஏற்கனவே மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் CRP(MD ) 1451/2013ன்படி உத்திரவு பறிப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவின் அடிப்படையில் சுவாதீன ஒப்படைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ள நிலையில், இந்த நிர் மனுதாரர் தரப்பில் EA.No. 55/2021ன் கோரிக்கை மனு தாக்கல் செய்து, சட்டப்படியும் பொருண்மைபடியும் இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு கடந்த 02.03.2022ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கு பொருண்மைபடியும், மாண்புமிகு மெட்ராஜ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRP(MD ) 1451/2013ல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை நிறைவேற்றும் பொருட்டும் இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்வு கண்டு இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

D RAMGANESH

Digitally signed by D RAMGANESH
Date: 2022.04.11 15:43:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி